THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Monday, the 31st March 1969.

The House met in the Council Chamber, *Fort. St. George*,
The House met in the Council Chamber, Fort St. George,
M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Use of the word 'Kumbakonam'

*2 *S.N.Q.*—THIRU S. RAGHAVANANDAM : Will the **Hon. the Chief Minister** be pleased to state—

(*a*) whether the statement of the General Secretary of Kumbakonam Tax Payers' Association protesting against the usage of the word 'Kumbakonam' in Kerala Legislative Assembly has been brought to the notice of the Government; and

(*b*) if so, the action taken or proposed to be taken by the Government to enable the word 'Kumbakonam' to be used in such a manner as not to wound the feelings of the people ?

'கும்பகோணம்' என்ற வார்த்தையை உபயோகித்தல்

திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 'கும்பகோணம்' என்ற வார்த்தை ஒரு தகாத பொருளில் கேரள சட்டசபையில் உபயோகிக்கப்பட்டு அதைக் கண்டிக்கும் வகையில் கும்பகோணம் வரி செலுத்துவோர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை அரசின் கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், 'கும்பகோணம்' என்னும் வார்த்தையை மக்கள் மனம் புண்படும்படியாக உபயோகிக்காமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது அல்லது எடுக்கப் போகின்றது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, "ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்குவதில் ஒரு லட்சம் ரூபாய் கும்பகோணம் செய்யப்பட்டிருக்கிறது" என்று கேரள சட்டமன்றத்தில் பேசியிருப்பபது நானே கும்பகோணத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தினால், எனக்கே வேதனையாக இருக்கிறது. அங்கே குறிப்பிட்ட அந்தப் பேச்சிலுள்ள அந்த வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து விலக்க வேண்டுமென்று நமது முதல் அமைச்சர் அவர்கள் அந்த அரசாங்கத்திற்கு எழுத முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முன்பு ஒரு முறை சட்டமன்றத்தில் 'கும்பகோணம்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு, அப்போதிருந்த சபாநாயகர் அவர்கள் அது பயன்படுத்தப்படலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நண்பர் இராகவானந்தம் குறிப்பிட்டதைப்போல பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியைப் பார்த்தால் அதில் "மருந்து வாங்குவதில் ஒரு லட்சம் ரூபாய் பெரிய கும்பகோணம் செய்ததாகக்" குறிப்பிட்டிருக்கிறார்

கள். ஒரு தவறு நடந்திருக்கிறது என்பதை அப்படிக் குறிப்பிட்டிருக் கிறார்கள். இருந்தாலும் அதைப்பற்றி நாம் இங்கே பேசிவிட்ட காரணத் தால் அவர்களே, அதைத் திருத்திக் கொள்வார்கள். நண்பர் 'கும்ப கோணம்' என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதில் வந்திருப்பது "பெரிய கும்பகோணம்" என்பதாகும். ஆகவே அது இவர்களைப் பாதிக்காது என்று கருதுகிறேன்.

Nehru Memorial Fund

* 296 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount collected districtwise towards "Nehru Memorial Fund" during 1963–64;

(*b*) the amount contributed to the Central Fund; and

(*c*) the purposes for which the balance was spent?

நேரு நிதி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1963–64-ல் நேரு நிதி மாவட்ட வாரியாக எவ்வளவு வசூல் செய்யப்பட்டது?

(இ) மத்திய நிதிக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது?

(உ) மீதி பணம் என்ன வகையில் செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி. தலைவர் அவர்களே, (அ) 1964 நவம்பர் மாதத்தில் நேரு நிதி வசூல் செய்யப்பட்டது. 1968 அக்டோபர் 25 தேதி வரையில், ரூ. 38,46,276·83 வசூல் செய்யப் பட்டது. மாவட்ட வாரியாக விவரம் தற்போதில்லை.

(இ) மத்திய நிதிக்கு இதிலிருந்து ரூ. 37,26,218·71 கொடுக்கப் பட்டது.

(உ) தற்போது (30—1—1969-ல்) மீதி ரூ. 1,22,458·82 ஸ்டேட் பாங்கில் டெப்பாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

Burglaries in Tambaram area

* 297 *Q.*—Thiru N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of burglaries that took place in Tambaram and its surroundings from 1st January 1968 to 31st August 1968;

(*b*) the number of persons arrested so far in this connection; and

(*c*) the number of persons against whom cases were filed?

தாம்பரம் வட்டாரத்தில் நடந்த கொள்ளைகள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி வரை தாம்பரத்திலும், தாம்பரம் வட்டாரத்திலும் எத்தனை கொள்ளைகள் நடந்தன?

(இ) இது சம்பந்தமாக எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?